

# கணக்கீடு

பங்காளர் பங்குடைமையில் சேரும் போதும் விலகும் போதும் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் பதிதல்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 10.5

# பங்குடைமை வணிகமொன்றின் உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்கள்

- பங்காளர் சேரல்
- பங்காளர் விலகல்
- பங்காளரது இலாப நட்ட விகிதம் மாற்றமடைதல்

## பங்காளர் சேரல்

⇒ தொடர்ந்தியங்கும் பங்குடைமையொன்றில் ஏற்கனவே உள்ள பங்காளரது சம்மதத்துடன் புதிய பங்காளர் ஒருவர் இணைந்து கொள்ளும் செயற்பாடு பங்காளர் சேரல் ஆகும்

⇒ பங்காளர் சேரலின்போது நன்மதிப்பு மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்படும் அதற்குரிய இரட்டை பதிவு வருமாறு

> சேரும் பங்காளர் உட்பட அனைத்து பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
>
> சேரும் பங்காளர் தவிர பழைய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

⇒ பங்காளர் நிதியாண்டு இறுதியில் சேரும் போது நன்மதிப்பு சீராக்கப்பட முன்னுள்ள ஆரம்ப மூலதன மீதிக்கு வட்டி கணிப்பிடப்படும்

⇒ புதிய பங்காளர் மூலதனப் பங்களிப்புக்கு இரட்டை பதிவு வருமாறு

> காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு/ சொத்துகணக்கு வரவு
>
> புதிய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு



⇒ பங்காளர் நிதியாண்டு ஆரம்பத்தில் சேரும் போது நன்மதிப்பு சீராக்கப்பட பின்னுள்ள இறுதி மூலதன மீதிக்கு வட்டி கணிப்பிடப்படும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**உதாரணம்**

பங்குடைமையொன்றில் மல்லிகை, முல்லை என்போர் இலாப நட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள். 01/04/2018 மூலதன மீதிகள் முறையே

மல்லிகை ரூ.540000 முல்லை ரூ.400000

இப் பங்குடைமையில் 01/04/2018 இல் ரோஜா என்பவர் புதிய பங்காளராக சேர்க்கப்பட்டார். இவர் மூலதனப் பங்களிப்புக்கு ரூ.200000 காசும் ரூ.100000 மதிப்புள்ள பொறியையும் ஈடுபடுத்தினார்

புதிய இலாப நட்ட வீதம் முறையே 5:3:2 நிறுவன நன்மதிப்பு ரூ.100000 நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்குக. புதிய உடன்படிக்கைக்கு அமைய மூலதன வட்டி 10%

**31/03/2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பின்வருவனவற்றை தயாரிக்குக**

1. பங்காளர் மூலதனக் கணக்கு
2. மூலதன வட்டி
3. நாட்குறிப்பு பதிவுகள்

**விடைகள்**

**1**

**பங்காளர் மூலதனக் கணக்கு**

| விபரம் | மல்லிகை | முல்லை | ரோஜா | விபரம் | மல்லிகை | முல்லை | ரோஜா |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 50000 | 30000 | 20000 | மீதி | 540000 | 400000 | |
| | | | | காசு | | | 200000 |
| | | | | பொறி | | | 100000 |
| மீ/செ | 550000 | 410000 | 280000 | நன்மதிப்பு | 60000 | 40000 | |
| | 600000 | 440000 | 300000 | | 600000 | 440000 | 300000 |
| | | | | மீ/வ | 550000 | 410000 | 280000 |

**2**

மூலதன வட்டி மல்லிகை ரூ.55000

முல்லை ரூ.41000

ரோஜா ரூ.28000



**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3

**A**

**நன்மதிப்பு சீராக்கத்திற்கு**

மல்லிகை மூலதனக் கணக்கு வரவு ரூ.50000
முல்லை மூலதனக் கணக்கு வரவு ரூ.30000
ரோஜா மூலதனக் கணக்கு வரவு ரூ.20000
மல்லிகை மூலதனக் கணக்கு செலவு ரூ.60000
முல்லை மூலதனக் கணக்கு செலவு ரூ.40000

**B**

**மூலதனப் பங்களிப்புக்கு**

காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு ரூ.200000
பொறிக் கணக்கு வரவு ரூ.100000
ரோஜா மூலதனக் கணக்கு செலவு ரூ.300000

## பங்காளர் விலகல்

⇒ பங்குடைமையின்றில் உள்ள பங்காளர் ஒருவர் ஏதாவது காரணங்களை முன்னிட்டு பங்குடைமையிலிருந்து வெளியேறிக்கொள்ளும் செயற்பாடு பங்காளர் விலகல் ஆகும்.

⇒ பங்காளர் விலகலின்போது நன்மதிப்பு மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்படும் அதற்குரிய இரட்டை பதிவு வருமாறு

விலகும் பங்காளர் தவிர தொடரும் பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
விலகும் பங்காளர் உட்பட பழைய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

⇒ பங்காளர் நிதியாண்டு ஆரம்பத்தில் விலகும்போது நன்மதிப்பு சீராக்கப்பட்ட இறுதி மூலதன மீதிக்கு வட்டி கணிப்பிடப்படும்

⇒ பங்காளர் நிதியாண்டு இறுதியில் விலகும்போது நன்மதிப்பு சீராக்கப்பட முன்னுள்ள ஆரம்ப மூலதன மீதிக்கு வட்டி கணிப்பிடப்படும்

⇒ விலகும் பங்காளர் உரிமைத் தொகை பின்வரும் முறையில் தீர்ப்பனவு செய்யப்படும்

1

உடனடியாக செலுத்தல் - இரட்டைப்பதிவு
விலகும் பங்காளன் மூலதனக் கணக்கு வரவு
காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு



**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)
**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2

கடன் கணக்கிற்கு மாற்றல்

விலகும் பங்காளன் மூலதனக் கணக்கு வரவு

கடன் கணக்கு செலவு

இக்கடனுக்கு 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச்சட்டத்தின் 42ம் பிரிவுப் படி ஆண்டுக்கு ஆகக் குறைந்தது 5% வட்டி கணிக்கப்படும்

**உதாரணம்**

பங்குடைமையொன்றில் மல்லிகை, முல்லை, ரோஜா என்போர் இலாபநட்டங்களை 5:3:2 என பகிரும் பங்காளர். 01/04/2018 மூலதன மீதிகள் முறையே

மல்லிகை ரூ.500000 முல்லை ரூ.400000 ரோஜா ரூ.300000

இப் பங்குடைமையில் 01.04.2018 இல் ரோஜா என்பவர் இளைப்பாறினார் இவரது உரிமைத் தொகையில் 1/2 பகுதி உடனடியாக செலுத்தப்பட்டு மிகுதி 10% கடன் கணக்கிற்கு மாற்றப்படும்.

புதிய இலாப நட்ட வீதம் 3:2 நிறுவன நன்மதிப்பு ரூ.100000 நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்குக. புதிய உடன்படிக்கைக்கு அமைய மூலதன வட்டி 10%

31/03/2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பின்வருவனவற்றை தயாரிக்குக

1. பங்காளர் மூலதனக் கணக்கு
2. மூலதன வட்டி
3. நாட்குறிப்பு பதிவுகள்

**விடைகள்**

1

**பங்காளர் மூலதனக் கணக்கு**

| விபரம் | மல்லிகை | முல்லை | ரோஜா | விபரம் | மல்லிகை | முல்லை | ரோஜா |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 60000 | 40000 | - | மீதி | 500000 | 400000 | 300000 |
| காசு கடன் கணக்கு | | | 160000 | நன்மதிப்பு | 50000 | 30000 | 200000 |
| கடன் | | | 160000 | | | | |
| மீ/செ | 490000 | 390000 | | | | | - |
| | 550000 | 430000 | 320000 | | 550000 | 430000 | 320000 |
| | | | | மீ/வ | 550000 | 410000 | 280000 |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**2**

மூலதன வட்டி மல்லிகை ரூ.49000

முல்லை ரூ.39000

**3**

**A**

நன்மதிப்பு சீராக்கத்திற்கு

மல்லிகை மூலதனக் கணக்கு வரவு ரூ.60000

முல்லை மூலதனக் கணக்கு வரவு ரூ.40000

மல்லிகை மூலதனக் கணக்கு செலவு ரூ.50000

முல்லை மூலதனக் கணக்கு செலவு ரூ.30000

ரோஜா மூலதனக் கணக்கு செலவு ரூ.20000

**B**

இளைப்பாறும் பங்காளனுக்குரிய உரிமை செலுத்தப்படுதல் அல்லது கடனுக்கு மாற்றுதல்

ரோஜா மூலதனக் கணக்கு வரவு ரூ.320000

காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூ.160000

கடன் கணக்கு செலவு ரூ.160000

**C**

ரோஜா கடன் வட்டி

இலாப நட்டக் கணக்கு வரவு ரூ.16000

அட்டுறு வட்டிக் கணக்கு செலவு ரூ.16000

**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk